අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/1/1/2/5

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2024.04. 27

***சுற்றுநிருப இலக்கம்: 16 / 2024***

*அனைத்து மாகாணப் பிரதம செயலாளர்கள்,*

*அனைத்து மாகாணக் கல்விச் செயலாளர்கள்,*

*அனைத்து மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,*

*அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,*

*அனைத்துக் கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்,*

*அனைத்து அதிபர்களுக்கு,*

***<u>அகில இலங்கை பாடசாலை கர்நாடக சங்கீதப் போட்டிகள் - 2024</u>***

கல்வி அமைச்சினால் வருடாந்தம் நடாத்தப்படும் மேற்படி போட்டியின் 2024 வருடத்திற்குரியதாக இச் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள், ஆலோசனைகள் மற்றும் ஆக்கங்களை முன்னிலைப்படுத்தவேண்டிய போட்டிப் பிரிவு தொடர்பாக தங்களது கவனத்திற்கு கொண்டுவருகின்றேன்.

02. இவ் விடயம் தொடர்பாக உரிய ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை அறியப்படுத்தி இப் போட்டியில் அவர்களது ஆக்கங்களை முன்னிலைப்படுத்துவதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு தயவுடன் கோருகின்றேன்.

ஜே. எம். திலகா ஜயசுந்தர
**செயலாளர்**

அறிமுகம்

கல்வி அமைச்சின் அழகியல் கிளையினால் வருடாந்தம் நடாத்தப்படுகின்ற இப்போட்டியினால் மாணவர்களின் இசைத்துறை வளர்ச்சி மேம்படுத்தப்படுகிறது. இப்போட்டியில் வெற்றிபெறும் மாணவர்களுக்கு உயர் கல்வியின்போது முன்னுரிமை வழங்கப்படுகின்றது.

போட்டியின் நோக்கம்

இசைத்துறை மாணவர்களின் ஆற்றுகைப்படுத்தும் திறன் மற்றும் படைப்பாற்றல் திறனை விருத்தி செய்யும் நோக்கில் இப்போட்டிகள் நடாத்தப்படுகின்றன.

**போட்டிக்கான பொது விதிமுறைகள்**

1.1. மேற்குறிப்பிடப்பட்ட பிரிவுகள் தனி, குழு நிகழ்ச்சிகளாக பொருத்தமான வகையில் பிரிக்கப்பட்டுள்ளன.

1.2. இவற்றுள் ஏதாவது ஒரு பிரிவு ஆண்கள், பெண்கள், மற்றும் இருபாலரும் என்ற ரீதியில் குறைந்தபட்சம் ஒரு பிரிவாகவோ பல பிரிவுகளாகவோ ஒன்பது பிரிவுகளாக வகைப்படுத்தப்படும்.

1.3. மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு போட்டிப் பிரிவுகளும் 1.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆங்கில குறியீடுகள் மற்றும் இலக்கங்கள் என இரு கட்டங்களில் உள்ளடக்கப்படும். அவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒழுங்கமைக்கப்படும்.

**ஆங்கிலக் குறியீடுகள்**

A. கீழ் பிரிவு
B. மத்திய பிரிவு
C. மேல் பிரிவு
D. திறந்த போட்டிப் பிரிவு

பங்குபற்றும் போட்டியாளர்கள் பிரதான நான்கு பிரிவுகளுக்கு உட்படுவர்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| A. | கீழ் பிரிவு | தரம் | 06 | தொடக்கம் | 08 | வரை |
| B. | மத்திய பிரிவு | தரம் | 09 | தொடக்கம் | 11 | வரை |
| C. | மேல் பிரிவு | தரம் | 12 | தொடக்கம் | 13 | வரை |
| D. | திறந்த போட்டிப் பிரிவு | தரம் | 06 | தொடக்கம் | 13 | வரை |

**முதலாம் இலக்கம்**

1.4. மேலே குறிப்பிட்ட பிரிவுகளின்படி இப்போட்டிகள் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

1. வாய்ப்பாட்டுப் பிரிவு
2. இசைக்கருவிப் பிரிவு
3. இசை நாடகப் பாடல் பிரிவு

**இரண்டாம் இலக்கம்** : ஒவ்வொரு போட்டிப் பிரிவுகளுக்கேற்ப தொடரிலக்கம் வேறுபடும்

1.5. அந்தந்தப் போட்டிப் பிரிவுகளுக்குரிய விதிமுறைகள் போட்டி நிகழ்வைத் தொடர்ந்து வழங்கப்டுவதுடன், சில போட்டி விதிமுறைகள் போட்டி நிகழ்வுகளுக்கு மேலே வழங்கப்படும் விதிமுறைகளும் பொருத்தமாகும்.

## 2. பங்குபற்றும் விதிமுறைகள்

2.1 பங்குபற்றும் பாடசாலைகள் பிரதான மூன்று பிரிவுகளுக்குள் உட்படுத்தப்படும். இது தொடர்பாக போட்டி விதிமுறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் மாணவர் எண்ணிக்கைக்கேற்ப பாடசாலைகள் வகைப்படுத்தப்படுள்ளன. வகைப்படுத்தப்பட்ட பாடசாலை பிரிவுகளில் உள்ளடக்கப்படாத பாடசாலைகள் ஏனைய பாடசாலைகளுடன் இணைந்து போட்டியில் பங்குப்பற்றலாம். உரிய பாடசாலை அதிபர், மாணவர்களின் எண்ணிக்கை, பாடசாலையின் வகை என்பன பற்றி உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஒரு பாடசாலைக்கு 03 (மூன்று) நிகழ்ச்சிகளில் மாத்திரமே பங்குபற்ற முடியும். சர்வதேச பாடசாலைகள் மற்றும் ஏனைய தனியார் பாடசாலைகளும் அவற்றிற்கான போட்டிப் பிரிவுகளுக்கு மட்டுமே பங்குபற்ற முடியும்.

- 300 வரையான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்
- 301 – 1000 இற்கு இடைப்பட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்
- 1001 இற்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்

2.2 ஒரு பாடசாலைக்கு 03 (மூன்று) நிகழ்ச்சிகளில் மாத்திரமே பங்குபற்ற முடியும். ஒரே போட்டிப் பிரிவில் மூன்று போட்டிகளையும் தெரிவு செய்ய முடியாது.

போட்டிகளை தெரிவு செய்யும் விதம்

| | | போட்டிப் பிரிவுகள் தெரிவு செய்யும் விதம் | |
|---|---|---|---|
| A,B,C,D எனும் நான்கு பிரிவுகளிலும் அதிகபட்சம் மூன்று நிகழ்ச்சிகள் மாத்திரம்.<br><br>போட்டிப் பிரிவுகள் (01 – 96 வரை) | A | கீழ்ப் பிரிவு | ஒரு பாடசாலையில் பங்குபற்றும் அனைத்து நிகழ்ச்சிகளும் தனி நிகழ்ச்சிகளாகவோ, குழு நிகழ்ச்சிகளாகவோ இடம்பெறலாகாது. |
| | B | மத்தியப் பிரிவு | |
| | C | மேல் பிரிவு | |
| | D | திறந்த போட்டிப் பிரிவு | |

2.3 இப்போட்டி நிகழ்ச்சிகளுக்குத் தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையான மாணவர்கள் பங்குபற்ற முடியும் என்பதுடன் பாடசாலையினூடாக இரண்டாம் தடவை உயர்தரத்திற்கு மற்றும் சாதாரண தரத்திற்கு தோற்றும் மாணவர்களும் மற்றும் போட்டி நிகழ்ச்சி நடைபெறும் வருடத்தில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களும் பங்குபற்ற முடியும். மேலும் வலயமட்ட போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற சந்தர்ப்பத்தில் இரண்டாம் தடவை பாடசாலையினூடாக பரீட்சைக்குத் தோற்றி பெறுபேறுகள் வெளியாகிய மாணவர்கள் போட்டி நிகழ்ச்சியில் பங்குபற்ற முடியாது. ஒரு சந்தர்பத்தில் வலயமட்ட அல்லது மாகாண மட்ட போட்டியில் பங்குபற்றிய ஒரு மாணவர் போட்டிகள் நிறைவடையும் முன்னர் பாடசாலையில் இருந்து விலகுவாராயின் விசேட அனுமதியுடன் அப்போட்டிக்குப் பங்குபற்ற வாய்ப்பளிக்கப்படுகிறது.

2.4 கல்வி அமைச்சின் செயலாளர் / சகல மாகாண கல்விச் செயலாளர்கள் / சகல மாகாண கல்விப் பணிப்பாளர்கள் / சகல மாகாண அழகியற்துறை பணிப்பாளர்களின் அனுமதியின்படி தேவை ஏற்படின் அதே மாகாணத்தில் வேறு ஒரு பாடசாலையின் ஆசிரியரையோ, மாணவரையோ பக்கவாத்யக் கலைஞராகப் பயன்படுத்தலாம். அவ்வாறாயின் உரிய அதிபரின் அனுமதியினை பெற்றிருத்தல் வேண்டும்.

2.5 பக்கவாத்யக் கலைஞராக ஆசிரியர்கள் பங்கேற்பின் அதிகபட்சம் இரண்டு (02) ஆசிரியர்கள் மாத்திரமே பங்குபற்ற முடியும். (அரச நியமனம் பெற்ற உதவி ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் உதவி அபிவிருத்தி அலுவலர்கள் இப்போட்டியில் பங்குபற்றும் சந்தர்ப்பத்தில் அவர்கள் ஆசிரியர்களாகவே கருதப்படுவர்.) போட்டியில் பங்குபற்றும் பாடசாலையில் பணிபுரியும் அரச நியமனம் பெற்ற உதவி ஆசிரியர்கள், அபிவிருத்தி

உத்தியோகத்தர்கள், உதவி அபிவிருத்தி அலுவலர்கள் போட்டியில் பக்கவாத்யக் கலைஞராக தாங்கள் பணிபுரியும் பாடசாலை போட்டி நிகழ்ச்சிக்கு மட்டுமே பங்குபற்றக்கூடிய வாய்ப்புள்ளது. ஏனைய பாடசாலைகளின் போட்டி நிகழ்வுகளுக்கு அவர்கள் பங்குபற்ற முடியாது.

**2.6** பக்கவாத்யக் கலைஞர்களாக பங்குபற்றும் மாணவர்கள் அவர்கள் பங்குபற்றும் போட்டி நிகழ்ச்சிப் பிரிவுகளுக்கு உரித்தான வயது மட்டத்தில் இருக்கவேண்டியதில்லை. பக்கவாத்ய கலைஞர்களாக தரம் 6 – 13 வரையான மாணவர்கள் பங்குபற்ற முடியும். மேலும் ஆண், பெண் வேறுபாடுகளும் பொருட்படுத்தப்படமாட்டாது. பக்கவாத்ய கலைஞர்களாக பங்குபற்றுபவர் அந்நிகழ்ச்சியின் வாய்பாட்டு இசையில் பங்கேற்க முடியாது. **பக்கவாத்யக் கலைஞர்களின் வருகைக்காக போட்டி நிகழ்வுகள் தாமதிக்கப்பட மாட்டாது. தாமதிக்கப்படும் பட்சத்தில் உரிய நிகழ்ச்சி போட்டியில் பங்குபற்ற அனுமதிக்கப்டமாட்டாது.**

2.7 சகல போட்டி நிகழ்ச்சிகளுக்கும் பக்கவாத்யக் கலைஞராக பங்குபற்றுபவர் அரச பணியாளராகவோ அல்லது பாடசாலை மாணவராகவோ மட்டும் இருத்தல் வேண்டும்.

2.8 சகல போட்டியாளர்களும் வலய மட்ட போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கும் போது கல்வி கற்கும் தரத்தின் கீழ் தேசிய போட்டி வரை பங்குபற்றும் தகுதியுடையவராவார். அதேபோல் வேறு பாடசாலையில் கல்வியைத் தொடர இணைந்துள்ள மாணவர்கள் வலய மட்ட போட்டிக்கு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கும் போது கல்வி கற்ற பாடசாலையின் போட்டியாளராகவே பங்குபற்ற முடியும்.

2.9 கடந்த வருடம் (2023) தனி, குழு நிகழ்ச்சிகளில் முதலிடம் பெற்றுக்கொண்ட மாணவர்கள் இவ்வருடம் நடைபெறும் போட்டியின் அதே நிகழ்ச்சியில் பங்குபற்ற முடியாது. பக்கவாத்யக் கலைஞர்களாக பங்குபற்ற முடியும்.

2.10 குழு - இருபாலர் இசைப்போட்டியில் வாய்ப்பாட்டு போட்டி நிகழ்ச்சிப் பிரிவில் ஆண்கள் - 4, பெண்கள் - 4 என்ற எண்ணிக்கைக்கு குறையாது இருக்கவேண்டும்.

2.11 இப் போட்டிக்காக தயார்ப்படுத்தப்படுகின்ற பாடல்கள் இன, மத பேதங்களுக்கோ அல்லது அரசியல் சார்ந்த கருத்துகளுக்கோ வித்திடாதவையாகவும், பாடசாலை மாணவர்களுக்குப் பொருத்தமானவையாகவும் இருத்தல் வேண்டும்.

2.12 பெண்கள் / ஆண்கள் குழு நிகழ்ச்சிகளில் பங்குபற்றும் போட்டியாளர்க்ள் பக்கவாத்யக் கலைஞர்களாகத் தாங்களே பங்குபற்ற வேண்டும். பெண்களுக்குரிய போட்டியில் ஆண்களோ, ஆண்களுக்குரிய போட்டியில் பெண்களோ பங்குபற்ற முடியாது.

2.13 மாகாண உத்தியோகத்தர்களினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைவாக வலய, மாகாண மட்ட போட்டிகளின் போது விசேட உடைகளில் பங்குபற்றாது பாடசாலை சீருடையுடனே கட்டாயம் பங்கு பற்றுதல் வேண்டும். பெண்கள் பாடசாலை சீருடையுடன் நீளக்காற்சட்டை மற்றும் ஆண்கள் வேட்டி அணியலாம். தேசிய மட்டப் போட்டிக்கு மாத்திரம் உரிய நிகழ்ச்சிகளுக்கான உடை, ஒப்பனை பயன்படுத்தலாம். புள்ளி நியதிகளின்படி தேசிய மட்டத்திற்கு மட்டும் ஆடை அலங்காரங்களுக்கு புள்ளி வழங்கப்படும்.

2.14 சகல போட்டி நிகழ்ச்சிகளுக்கும் மேடை அலங்காரம் முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளது.

2.15 போட்டிக்கான நேரசூசியின்படி பங்குபற்றாத போட்டியாளர்கள் அப்போட்டிக்கு பங்குபற்றவில்லை என கருதி முடிவுகள் அறிவிக்கப்படும்.

2.16 வலய, மாகாணமட்ட போட்டிகளின்போதும். பயிற்சிகளின் போதும் அந்தந்த காலப்பகுதிகளில் நாட்டில் காணப்படும் சுகாதார விதிமுறைகளை பின்பற்றுவது கட்டாயமானதாகும்.

## 3. போட்டியில் பங்குபற்றுதல்.

3.1 வலயமட்ட போட்டியின் போது சுற்றுநிருபத்தில் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தினை தயாரித்து அதனை பூர்த்தி செய்து வலயக் கல்விப் பணிப்பாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். இது தொடர்பாக தமது வலயத்தின் அழகியல் பாட உ.க.ப / பி.க.ப மற்றும் அழகில் பாட ஆசிரியர் ஆலோசகர்களிடமிருந்து ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளலாம்.

3.2 குறிப்பிட்ட போட்டிப் பிரிவில் பங்குபற்றக்கூடிய போட்டியாளர்களின் எண்ணிக்கை தொடர்பான விதிமுறைகள் போட்டி நிகழ்ச்சியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

3.3 நடுவர்களால் போட்டி நிகழ்ச்சிக்குரிய எண் வழங்கப்படும் சந்தர்ப்பங்களில் போட்டியில் பங்கேற்று நிறைவுபெறும் வரை நிகழ்ச்சியில் பங்குபற்றும் மாணவர்களின் எண்ணிக்கை மட்டுமே கருத்தில் கொள்ளப்படும். ஏதேனும் அவசரநிலை காரணமாக போட்டியாளர்களில் யாரேனும் இடைவிலக நேரிட்டால் அவர்களின் பெயர் போட்டி நிகழ்ச்சியில் இருந்து நீக்கப்படும். வலயமட்ட, மாகாண மட்ட மற்றும் இறுதிப் போட்டிகளில் பங்கேற்கும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் மட்டுமே ஏற்பாட்டுக் குழுவின் முன் கையொப்பமிட வேண்டும்.

3.4 சகல போட்டியாளரும்/பங்கேற்பாளரும் பின்வருமாறு ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும்.

- வலயமட்ட போட்டிக்கு அதிபரின் உறுதிப்படுத்தப்பட்ட பெயர்ப்பட்டியல் போதுமானது. மாகாண மட்ட போட்டியின் போது இடைநிலைப் பிரிவு மாணவர்களுக்கு அதிபரின் உறுதிப்படுத்தப்பட்ட பெயர்ப்பட்டியலும் உறுதிப்டுத்தப்பட்ட புகைப்படமும், சிரேஷ்டப் போட்டிப் பிரிவு 02 இற்கு அதிபரின் உறுதிப்படுத்தப்பட்ட பெயர் பட்டியலுடன் புகைப்படமும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணத்தையும் சமர்ப்பிக்க வேண்டும்.

- இறுதிப் போட்டியின் போது ஆளடையாளம் தொடர்பாக ஏதேனும் ஆவணங்கள் சமர்ப்பிக்க நேரிட்டால் போட்டியாளரின் பிறப்புச்சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும். கீழ்ப் போட்டிப் பிரிவு மாணவர்கள் வலயக் கல்விப் பணிப்பாளரால் உறுதிப்படுத்தப்பட்ட புகைப்படத்தினையும், சிரேஷ்டப்பிரிவு மாணவர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணத்தையும் சமர்ப்பிக்க வேண்டும். அனைத்து போட்டிப் பிரிவுகளிலும், பங்குபற்றும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் பெயர்ப்பட்டியல் அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்டு பதவி முத்திரையிடப்பட்ட இரு பிரதிகள் சமர்ப்பிக்க வேண்டும்.

3.5. குறிப்பிட்ட போட்டி நிகழ்ச்சிக்கு விண்ணப்பிக்கும் போது அந்தந்த போட்டிகளின் கீழ் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தினை பயன்படுத்த வேண்டும். விண்ணப்பப் படிவம் பூரணப்படுத்தும் போது தட்டச்சு செய்யப்பட்டாலன்றி மிகத் தெளிவான கையெழுத்தில் பூர்த்தி செய்வது கட்டாயமானதாகும். பெயர்களின் முதலெழுத்துகள் ஆங்கிலத்தில் எழுதப்பட வேண்டும். வேறு பாடசாலையில் உள்ள ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பக்கவாத்ய கலைஞர்களாக பங்கேற்பின் அவர்கள் தொடர்பான தகவல்களை மேலே குறிப்பிட்ட அதே படிவத்தில் பொருத்தமான இடத்தில் குறிப்பிட வேண்டும். சகல போட்டி சந்தர்ப்பங்களிலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். ஒரு பாடசாலையில் பல போட்டிப் பிரிவுகளில் பங்கேற்கும் சந்தர்ப்பங்களில் ஒவ்வொரு போட்டி நிகழ்ச்சிக்கும் தனித்தனியான விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேலும் விண்ணப்பப் படிவத்தில், பங்கேற்கும் மாணவரின் பெயருக்கு முன்னால் அவர்களின் வயதைக் குறிப்பிட வேண்டும். பங்கேற்கும் ஆசிரியரின் பெயருக்கு முன்னால், திரு/திருமதி/ செல்வி எனக் குறிப்பிடல் அத்தியாவசியமாகும்.

3.6. தேசிய மட்டத்திற்கு தெரிவாகும் சகல போட்டிகளிலும் பங்குபற்றும் பாடசாலைகள் தேசிய மட்ட போட்டியில் பங்குபற்றும் சந்தர்ப்பத்தில் இணைப்பு 01 இனை பூரணப்படுத்தி சமர்ப்பிப்பது கட்டாயமாகும்.

**4. வலய/ மாகாண மட்டப் போட்டி ஒழுங்கமைப்பு**

4.1. வலய மட்டப் போட்டியானது உரிய வலயக் கல்விப் பணிப்பாளர், அழகியற்துறைப் பணிப்பாளர் / பாடத்திற்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர் / உதவிக் கல்விப் பணிப்பாளர் அல்லது ஆசிரிய ஆலோசகரினால் ஒழுங்கமைக்கப்பட வேண்டும். வலயமட்ட போட்டியின் அனைத்து பொறுப்புகளும் வலயக்கல்விப் பணிப்பாளர்களே வகைக்கூற வேண்டும். அத்தோடு போட்டி விதிமுறைகளை மீறாமல் இறுதி தீர்வை வலயக் கல்விப்பணிப்பாளர் வழங்க வேண்டும். வலயமட்ட போட்டிகள் 30.05.2024 ஆம் திகதிக்கு முன் நடத்தப்பட்டு மாகாண மட்ட போட்டிகளை ஒழுங்கமைப்பதற்காக மாகாண கல்விப் பணிப்பாளரிடம் உரிய ஆவணங்களை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்

4.2. மாகாண மட்ட போட்டியானது உரிய மாகாணக் கல்விப் பணிப்பாளரால் ஏற்பாடு செய்யப்படும். இச்செயற்பாட்டில் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு உதவிக் கல்விப் பணிப்பாளர் / பாடத்திற்குப் பொறுப்பான மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் உதவ வேண்டும். அவசியமான சந்தர்ப்பங்களில் மட்டும், மாகாணக் கல்விப் பணிப்பாளர் மற்றும் கல்வி அமைச்சின் கல்விப் பணிப்பாளர் (அழகியல்) ஆகியோரின் அனுமதியின் பேரில் இணைப்பாளர், நிகழ்சி ஒழுங்கமைப்பு அதிகாரிகள் நியமிக்கப்படுவர். மாகாணப் போட்டியின் அனைத்துப் பொறுப்புகளும் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு வழங்கப்படுவதுடன், போட்டி விதிமுறைகளை மீறாமல் இறுதி தீர்வை மாகாணக் கல்விப்பணிப்பாளர் வழங்க வேண்டும். ஏதேனும் போட்டி நிகழ்ச்சி தொடர்பான பிரச்சனைகள் இருப்பின், பாடத்திற்குப் பொறுப்பான பிரதிக் கல்விப்பணிப்பாளர் / உதவிக் கல்விப் பணிப்பாளரின் ஆகியோரின் பரிந்துரைப்படி மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் உரிய தீர்வுகளை எடுக்க வேண்டும். மாகாண மட்டப் போட்டிகள் **30.08.2024** ஆம் திகதிக்கு முன் நடத்தப்பட வேண்டும் மற்றும் இறுதிப் போட்டிகளை ஏற்பாடு செய்வதற்காக ஆவணங்கள் கல்வி அமைச்சின் அழகியல் கிளையின் பணிப்பாளரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4.3. வலய மட்டப் போட்டி நிகழ்ச்சிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களே மாகாண மட்ட போட்டி நிகழ்ச்சிகளுக்கும், மாகாண மட்டப் போட்டி நிகழ்ச்சிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களே தேசிய மட்டப் போட்டி நிகழ்ச்சிகளுக்கும் பங்குபற்றுவது கட்டாயமானதாகும். இது தொடர்பான எதிர்பாரத சந்தர்ப்பங்களில் ஏதேனும் பிரச்சினைகள் ஏற்படுமிடத்து குறிப்பிட்ட பாடசாலை அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க வலயமட்ட போட்டியின் போது வலயக் கல்விப்பணிப்பாளரிடமும், மாகாண மட்டப்போட்டியின் போது மாகாணக் கல்விப்பணிப்பாளரிடமும், தேசிய மட்டப் போட்டியின் போது கல்வி அமைச்சின் அழகியல் கிளையின் கல்விப் பணிப்பாளரினூடாகவே இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்.

4.4. ஏதேனும் ஒரு போட்டிப் பரிவில் வலயமட்டப் போட்டியில் பங்குபற்றாத பாடசாலை மாகாண மட்டப் போட்டியில் பங்குபற்றாமை குறித்தும் மாகாண மட்ட போட்டியில் பங்குபற்றாத பாடசாலை தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றாமை குறித்தும் வலயக்கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்விப்பணிப்பாளர், மாகாண அழகியற்துறைப் பணிப்பாளர், இணைப்பாளர் ஆகியோர் பொறுப்பேற்க வேண்டும்.

4.5. வலய மட்ட, / மாகாண மட்ட போட்டிகளில் எக்காரணம் கொண்டு சம இடங்கள் வழங்கப்படுவது தவிர்க்கப்படல் வேண்டும். ஒரு போட்டிப் பிரிவில் தேசிய போட்டிக்கு ஒரு மாகாணத்தில் இருந்து ஒரு பாடசாலை மட்டுமே தெரிவு செய்யப்படல் வேண்டும். இது தொடர்பான முழுமையான வகைக்கூறல் மாகாணக் கல்விப்பணிப்பாளரையே சாரும். தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்படுவது மாகாணமட்டப் போட்டியில் முதலாம் இடத்தினைப் பெற்றுக்கொண்ட பாடசாலை மட்டுமாகும்.

## 5. போட்டிகளின் முடிவு

5.1. வலய மட்டப் போட்டிகளுக்கான நடுவர் குழாம் வலயக் கல்விப்பாளரினூடாகவும் மாகாண மட்டப் போட்டிகளுக்கான நடுவர் குழாம் மாகாணக் கல்விப்பாளரினூடாகவும் மாகாண / வலய பாட பணிப்பாளர்களின் பரிந்துரைப்படி நியமிக்க வேண்டும். இறுதிப் போட்டியின் நடுவர் குழாமை கல்வி அமைச்சின் சங்கீதப் பாட பணிப்பாளரின் ஆலோசனையின்படியும் மற்றும் அழகியில் பிரிவுப் பணிப்பாளரின் அனுமதியின்படியும் தீர்மானிக்கப்படும். ஏதேனும் போட்டிப் பிரிவில் பாடத்துறை சார்சார்த இடர்பாடுகள் எழுமாயின் அது தொடர்பான தீர்மானம் கல்வி அமைச்சின் செயலாளரின் அனமதியுடன் நடுவர் குழாமுடன் கலந்துரையாடி மேற்கொள்ளப்படும்.

5.2. வலய மட்ட, / மாகாண மட்ட போட்டிகளில் பொருத்தமான நடுவர்களை தெரிவுசெய்வது வலயத்தின் அழகியல் பாட உ.க.ப / பி.க.ப மற்றும் அழகில் பாட ஆசிரியர் ஆலோசகர்களின் பொறுப்பாகும். முடிவுகள் பெற்றுக்கொடுக்கும் போது பாராபட்சமின்றி, போட்டி விதிமுறைகள், நியதிகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நடுவர் குழாமிற்கு அறிவுறுத்தல் தொடர்பான விடயங்களை மேற்கொள்வது வலயத்தின் அழகியல் பாட உ.க.ப / பி.க.ப மற்றும் அழகில் பாட ஆசிரியர் ஆலோசகர்களின் பொறுப்பாகும்.

5.3. சகல போட்டிகளும் நிறைவு செய்யுமிடத்து போட்டி முடிவுகளை வலய / மாகாணக் கல்விப் பணிப்பாளரின் கையொப்பத்துடன் பாதுகாப்பாக வைத்திருப்பது வலயத்தின் அழகியல் பாட உ.க.ப / பி.க.ப மற்றும் அழகில் பாட ஆசிரியர் ஆலோசகர்களின் பொறுப்பாகும். போட்டி முடிவுகள் தொடர்பான மீள் பரிசீலனை செய்யப்படின் உரிய ஆவணங்கள் சமர்ப்பித்தல் அத்தியாவசியமானதாகும்.

5.4. போட்டி முடிவின் போது ஏதேனும் ஒரு நிகழ்ச்சியில் குறைந்தது 33% பெறுபேற்று புள்ளியினை பெறாவிடத்து அந்நிகழ்வு வெற்றியீட்டிய நிகழ்வாக கருத்திற்கொள்ளப்படமாட்டாது.

5.5. வலய, மாகாண மற்றும் தேசிய மட்டப் போட்டி முடிவுகள் அன்றைய தினமே அறிவிக்கப்படும். ஏதேனும் சந்தர்ப்பத்தில் உரிய நிகழ்ச்சி தொடர்பாக பிரச்சினைகள் காணப்படின், பரிசீலனையின் பின் போட்டி முடிவுகள் அறிவிக்கப்படும். போட்டி நடைபெறும் போது போட்டியாளர்களோ, பொறுப்பாசிரியர்களோ நடுவர்களுடன் கலந்தாலோசிப்பது தடைசெய்யப்பட்டுள்ளதுடன் போட்டி நிகழ்வு தொடர்பான ஆலோசனை காணப்படின் பிரதான போட்டி ஏற்பாட்டுக் குழுவிடம் எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

5.6. போட்டி நிகழ்ச்சியின் போது போட்டித் தொடர்பான விதிமுறைகள் மீறப்பட்டுள்ளமை தகுந்த ஆதாரங்கள் மூலம் நிருபணமாயின் பரிசீலனை மூலம் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

5.7. போட்டி முடிவுகள் அறிவித்த பிறகு அதிகப் புள்ளியீட்டிய பாடசாலைக்கு எதிராக புகார்கள் சமர்ப்பிக்கும் பட்சத்தில் புகாரின் தன்மையினைப் பொருத்து அப்பாடசாலை முடிவு நீக்கப்படின் அடுத்ததாக அதிக புள்ளி பெற்ற பாடசாலை பிரதான இடத்திற்கு வரக்கூடியதாக முடிவு எடுக்கப்படும்.

## 6. போட்டி தொடர்பான வேறு விடயங்கள்

6.1. இப்போட்டியில் சுற்றுநிருபத்தின்படி சில போட்டிகளுக்கு மட்டும் இலத்திரனியல் ஸ்ருதிப் பெட்டி / தம்புராவை பயன்படுத்த முடியும்.

6.2. **பயன்படுத்தும் இலத்திரனியல் ஸ்ருதிப் பெட்டி / தம்புரா மற்றும் ஓர்கன் (Key board) உபகரணங்களுக்கு போட்டி நடைபெறும் இடத்தில் மின் இணைப்பு வழங்கப்படமாட்டாது.**

6.3. குழு இசைப் பிரிவில் பக்கவாத்யம் இசைப்பவர்கள் இயலுமாயின் பாடலாம்.

6.4. போட்டி நடைபெறும் போது பெற்றோர் மற்றும் ஏனையவர்களின் தலையீடு இடம்பெறுதல் முற்றாக தவிர்க்கப்பட்டுள்ளது.

**7. சான்றிதழ்கள் மற்றும் விருதுகள்**

7.1. வலய, மாகாண போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு வலய, மாகாணக் கல்வித் திணைக்களங்கள் சான்றிதழ்களை வழங்கும் பொறுப்பை ஏற்க வேண்டும். தேசிய மட்டத்தில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு கல்வி அமைச்சியினூடாக சான்றிதழ்கள் வழங்கப்படும்.

**8. ஒழுக்கம் மற்றும் பொறுப்புக்கூறல்**

8.1. சகல போட்டி சந்தர்ப்பங்களிலும் பங்குபற்றுவதற்காக போட்டி நிலையங்களுக்கு மற்றும் தங்குமிடங்களுக்கு வருகைத்தரும் மாணவர்களின் ஒழுக்கம், நடத்தைகள், பாதுகாப்பு மற்றும் பொறுப்பேற்றல் தொடர்பான பொறுப்புக்கள் அதிபர் உட்பட குழுவின் பொறுப்பாசிரியர்களையே சாரும்.

8.2. மாணவிகளுக்கு பொறுப்பாசிரியைகளும் மாணவர்களுக்கு பொறுப்பாசிரியர்களும் இருபாலாருக்கும் ஆசிரியர்கள், ஆசிரியைகள் பொறுப்பேற்று பாதுகாப்பளிக்க வேண்டும்.

8.3. போட்டி நடைபெறும் சூழலில் போட்டியாளரின் முழுப்பொறுப்பும் பொறுப்பாசிரியருக்கு உரித்துடையதாகும். போட்டிச் சூழலில் பெற்றோர் மற்றுமு் ஏனையோர் பங்குபற்றல் தவிர்க்கப்பட்டுள்ளது. அதற்கான முழு வகைக்கூறலும் அதிபரையே சாரும்.

8.4. இப்போட்டியில் பங்குபற்றும் அனைவரும் போட்டிக்குரிய விதிமுறைகளுக்கு கட்டுப்பட வேண்டும்.

8.5. இப்போட்டியின் அனைத்து சந்தர்ப்பங்களிலும் பாடசாலையின் ஒழுக்கத்தை மீறும் வகையில் சம்பவங்கள் இடம்பெறின் அப் பாடசாலையின் அதிபர் வலயக் கல்விப்பணிப்பாளர், மாகாணக் கல்விப்பணிப்பாளர், கல்வி அமைச்சின் செயலாளருக்குப் பதில் நியமிக்கப்பட்டுள்ள கல்விப் பணிப்பாளர் (அழகியல்) பங்கேற்பர். இது தொடர்பாக பாடசாலையில் இருந்து வேறு நபர்களின் தலையீடு ஏற்படின் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

8.6. சுற்றுநிருபத்தை மீறும் பட்சத்தில் வகைக்கூறலுக்கு உட்படுத்தப்பட்ட அதிகாரிகளின் பெயரில் உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

8.7. போட்டி நிகழ்விற்கு பங்கேற்கும் மாணவர், ஆசிரியர், கல்வியலாளர்கள், நடுவர்கள், இணைப்பாளர்கள் மற்றும் அனைவரும் கல்வி நிறுவனங்களின் ஆளுமை மற்றும் கௌரவத்திற்கு அபகீர்த்தி ஏற்படும் வகையில் நடப்பார்களாயின் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.போட்டிக்கான நிகழ்ச்சிகள் அழகியற் கல்விப் பணிப்பாளரினால் சுற்றுநிருபத்துடன் இணைத்து அளிக்கப்படும்

இப்போட்டியில் சமூகமளிக்கும் சகல போட்டியாளர்கள் மற்றும் அனைவரும் போட்டியின் எல்லா சந்தர்ப்பங்களிலுமு் சுற்று நிருபத்தை நன்கு விளங்கி சட்டத்திட்டங்களை கடைபிடிக்க வேண்டும். நடுவர்களின் தீர்ப்பை இறுதித் தீர்ப்பாகக் கொள்ளவேண்டும். போட்டி விதிமுறைகளை மீறும் பட்சத்தில் அல்லது போட்டி முடிவுகளை மாற்றும் பட்சத்தில் கல்வி அமைச்சினூடாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

A. கீழ் பிரிவு (தரம் 6, 7, 8)

**கர்நாடக இசையில் காணப்படும் “ஜாவளி” எனும் உருப்படி விரும்பிய இராகத்தில்**

01. தனி இசை - பெண்
02. தனி இசை - ஆண்

( 01 - 02 போட்டிப் பிரிவு 300 வரையான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்)

03. தனி இசை - பெண்
04. தனி இசை - ஆண்

( 03 - 04 போட்டிப் பிரிவு 301 -1000 வரையான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்)

05. தனி இசை - பெண்
06. தனி இசை - ஆண்

( 05 - 06 போட்டிப் பிரிவு 1001 இற்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்)

- 01- 06 வரையான போட்டிப் பிரிவுகளுக்கான அறிவுறுத்தல்கள்
  - சாஸ்த்திரிய இசையாக இருத்தல் வேண்டும்.
  - பக்க வாத்யங்களாக ஸ்ருதி வாத்யத்துடன் ஏதேனும் 1 தாள வாத்யம் தேவைப்படின் பயன்படுத்தலாம்.
  - நேரம் 3 – 4 நிமிடங்கள்

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| 1 | ஸ்ருதி | 20 |
| 2 | தாளம் | 20 |
| 3 | பாடுந் திறன் | 20 |
| 4 | பாவம் | 15 |
| 5 | உருப்படித் தெரிவு | 10 |
| 6 | நிலை-சமர்ப்பணம் | 10 |
| 7 | நேரம் | 05 |
| | மொத்தம் | 100 |

| | |
|---|---|
| பெண் | கங்கையாளே கங்கையாளே – எஸ். கே .பரராஜசிங்கம் |
| ஆண் | ஓ வண்டிக்காரா – நீலாவணன் |

07. தனி இசை - பெண்
08. தனி இசை - ஆண்

( 07 - 08 போட்டிப் பிரிவு 300 வரையான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்)

| | |
|---|---|
| பெண் | பாப்பா முகத்தில் பால் நிலவு – செ. குணரத்தினம் |
| ஆண் | இலங்கை என்பது நம் தாய் திருநாடு – ஏ. ஈ. மனோகர் |

09. தனி இசை - பெண்
10. தனி இசை - ஆண்

( 09 - 10 போட்டிப் பிரிவு 301 -1000 வரையான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் )

| | |
|---|---|
| பெண் | வாழ்க்கை வானவில்லின் கோலமல்ல – எழில்வேந்தன் |
| ஆண் | அழகு நிலா வானத்திலே – ஆர். முத்துசாமி |

11. தனி இசை - பெண்
12. தனி இசை - ஆண்

( 11 - 12 போட்டிப் பிரிவு 1001 இற்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்)

- 07 - 12 வரையான போட்டிப் பிரிவுகளுக்கான அறிவுறுத்தல்கள்
  - அதில் ஸ்ருதி வாத்யத்துடன் 2 பேர் பக்கவாத்யங்கள் இசைக்க பயன்படுதலாம்.
  - நேரம் 4 – 6 நிமிடங்கள்

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| 1 | ஸ்ருதி | 20 |
| 2 | தாளம் | 20 |
| 3 | பாடுந் திறன் | 20 |
| 4 | பாவம் | 15 |
| 5 | உச்சரிப்புத் தெளிவு | 10 |
| 6 | நிலை-சமர்ப்பணம் | 10 |
| 7 | நேரம் | 05 |
| | மொத்தம் | 100 |

| பெண்கள் -குழு, ஆண்கள் -குழு, இருபாலார் -குழு |
|---|
| கிராமிய பாடல் -அவரவர் பிரதேசத்திற்குரிய கிராமியப் பாடல்<br>(விளையாட்டுப்பாடல், பெழுதுபோக்குப்பாடல், தொழிற்பாடல், சமயச், சடங்குப் பாடல்) |

13. குழு இசை - பெண்கள்
14. குழு இசை - ஆண்கள்
15. குழு இசை - இருபாலார்

( 13 - 15 போட்டிப் பிரிவு 300 வரையான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்)

16. குழு இசை - பெண்கள்
17. குழு இசை - ஆண்கள்
18. குழு இசை - இருபாலார்

( 16 - 18 போட்டிப் பிரிவு 301 -1000 வரையான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்)

19. குழு இசை - பெண்கள்
20. குழு இசை - ஆண்கள்
21. குழு இசை - இருபாலார்

( 19 - 21 போட்டிப் பிரிவு 1001 இற்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்)

22. குழு இசை - பெண்கள்
23. குழு இசை - ஆண்கள்
24. குழு இசை - இருபாலார்

( 22 - 24 போட்டிப் பிரிவு சர்வதேச பாடசாலைகள் மற்றும் ஏனைய தனியார் பாடசாலைகள்)

- 13 - 24 வரையான போட்டிப் பிரிவுகளுக்கான அறிவுறுத்தல்கள்
    - பாரம்பரிய இசையாக இருத்தல் வேண்டும்.
    - 6 – 10 வரையான மாணவர்கள் ஒரு குழுவில் பங்குபற்றலாம் அதில் 3 பேர் பக்க வாத்யங்கள் இசைக்க பயன்படுதலாம்.
    - கிராமியப் பாடல் வகை பாரம்பரியத் தன்மை பொருந்தியதாகவும், உரிய பேச்சு வழக்கு பொருந்தியதாகவும் கட்டாயம் இருத்தல் வேண்டும்.
    - கிராமியப் பாடலில் சாஸ்த்திரிய நடன அபிநயங்கள் முற்றாக தவிர்க்கப்படல் வேண்டும்.
    - கிராமியப் இசைக்குரிய இயல்பான அங்க அசைவுகள் இடம்பெறலாம்.
    - நேரம் 5 – 7 நிமிடங்கள்

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| 1 | இயல்பான மொழி நடை | 20 |
| 2 | இயல்பான ஓசை | 20 |
| 3 | பொருத்தமான தாள வாத்ய இசை | 20 |
| 4 | பாடலுக்கேற்ற உணர்ச்சி வெளிப்பாடு | 15 |
| 5 | ஒத்திசைவு | 10 |
| 5 | ஒப்பனை ஆடை அணிகள் | 05 |
| 6 | நிலை-சமர்ப்பணம் | 05 |
| 7 | நேரம் | 05 |
| | மொத்தம் | 100 |

வலய, மாகாண போட்டிகளில் ஒப்பனை ஆடை அணிகளுக்குரிய புள்ளியை அனைவருக்கும் சமமாக வழங்கவும்.(பாடசாலை சீருடை காரணமாக)

**சகல பிரிவுகளுக்குமான தனி வாத்ய போட்டி நிகழ்ச்சிகளும் ஆண் பெண் வேறுபாடின்றி பொது போட்டி நிகழ்ச்சியாகவே நடாத்தபடும்.**

விரும்பிய இராகத்தில் அமைந்த சஞ்சாரி கீதம்

25. தனி வாத்யம் வயலின்
26. தனி வாத்யம் வீணை
27. தனி வாத்யம் புல்லாங்குழல்
28. தனி வாத்யம் நாதஸ்வரம்

( 25 - 28 போட்டிப் பிரிவு 300 வரையான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்)

29. தனி வாத்யம் வயலின்
30. தனி வாத்யம் வீணை
31. தனி வாத்யம் புல்லாங்குழல்
32. தனி வாத்யம் நாதஸ்வரம்

(29 - 32 போட்டிப் பிரிவு 301 -1000 வரையான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்)

33. தனி வாத்யம் வயலின்
34. தனி வாத்யம் வீணை
35. தனி வாத்யம் புல்லாங்குழல்
36. தனி வாத்யம் நாதஸ்வரம்

( 33 - 36 போட்டிப் பிரிவு 1001 இற்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்)

37. தனி வாத்யம் வயலின்
38. தனி வாத்யம் வீணை
39. தனி வாத்யம் புல்லாங்குழல்
40. தனி வாத்யம் நாதஸ்வரம்

( 37 – 40 போட்டிப் பிரிவு சர்வதேச பாடசாலைகள் மற்றும் ஏனைய தனியார் பாடசாலைகள்)

- 25 - 40 வரையான போட்டிப் பிரிவுகளுக்கான அறிவுறுத்தல்கள்
  - இருபாலாரும் ஸ்ருதியுடன் பக்க வாத்யமாக ஏதேனும் ஒரு தாள வாத்யத்தை பயன்படுத்தலாம்.
  - நேரம் 3 – 4 நிமிடங்கள்

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| 1 | ஸ்ருதி | 20 |
| 2 | தாளம் | 20 |
| 3 | வாசிக்குந் திறன் | 20 |
| 4 | உருப்படித் தெரிவு | 05 |
| 5 | சாஹித்ய பாவம் | 20 |
| 6 | நிலை-சமர்ப்பணம் | 10 |
| 7 | நேரம் | 05 |
| | மொத்தம் | 100 |

**சகல பிரிவுகளுக்குமான குழு வாத்ய போட்டி நிகழ்ச்சிகளும் ஆண்கள், பெண்கள், இருபாலார் என்ற வேறுபாடின்றி பொது போட்டி நிகழ்ச்சியாகவே நடாத்தபடும்.**

விரும்பிய இராகத்தில் அமைந்த இலகுவான கீர்த்தனை

41. குழு வாத்ய இசை பல்லியம்

( 41 - போட்டிப் பிரிவு 300 வரையான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்)

42. குழு வாத்ய இசை பல்லியம்

( 42 - போட்டிப் பிரிவு பிரிவு 301 -1000 வரையான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்)

43. குழு வாத்ய இசை பல்லியம்

( 43 - போட்டிப் பிரிவு 1001 இற்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்)

- 41 - 43 வரையான போட்டிப் பிரிவுகளுக்கான அறிவுறுத்தல்கள்
  - சாஸ்த்திரிய இசையாக இருத்தல் வேண்டும்.
  - 8 – 12 மாணவர்கள் பங்கு பற்றலாம்
  - குறைந்தது 4 வாத்யங்கள் இடம்பெற வேண்டும்.
  - நேரம் 4 – 6 நிமிடங்கள்

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| 1 | ஸ்ருதி | 20 |
| 2 | தாளம் | 20 |
| 3 | வாசிக்குந் திறன் | 20 |
| 4 | சாஹித்ய பாவம் | 15 |
| 5 | குழு ஒத்திசைவு | 10 |
| 6 | நிலை-சமர்ப்பணம் | 10 |
| 7 | நேரம் | 05 |
| | மொத்தம் | 100 |

B. மத்திய பிரிவு 01 - தரம் 09 தொடக்கம் 11 வரை

**அருணகிரிநாதர் திருப்புகழ் - விரும்பிய இராகத்தில்**

44. தனி இசை - பெண்
45. தனி இசை - ஆண்

( 44 – 45 போட்டிப் பிரிவு 300 வரையான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்)

46. தனி இசை - பெண்
47. தனி இசை - ஆண்

( 46 – 47 போட்டிப் பிரிவு பிரிவு 301 -1000 வரையான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்)

48. தனி இசை - பெண்
49. தனி இசை - ஆண்

( 48 – 49 போட்டிப் பிரிவு 1001 இற்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்)

- 44 – 49 வரையான போட்டிப் பிரிவுகளுக்கான அறிவுறுத்தல்கள்
  - பக்க வாத்யங்களாக ஸ்ருதி வாத்யத்துடன் ஏதேனும் 1 தாள வாத்யம் தேவைப்படின் பயன்படுத்தலாம்.
  - நேரம் 4 – 6 நிமிடங்கள்

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| 1 | ஸ்ருதி | 20 |
| 2 | தாளம் | 20 |
| 3 | பாடுந் திறன் | 20 |
| 4 | பாவம் | 15 |
| 5 | உருப்படித் தெரிவு | 10 |
| 6 | நிலை-சமர்ப்பணம் | 10 |
| 7 | நேரம் | 05 |
| | மொத்தம் | 100 |

திரையிசைப் பாடல் - (ஏழு ஸ்வரங்களுக்குள் எத்தனை பாடல்கள்)
50. குழு இசை - பெண்கள்

திரையிசைப் பாடல் - (இராகங்கள் பதினாறு உருவான வரலாறு)
51. குழு இசை - ஆண்கள்

திரையிசைப் பாடல் (வெள்ளைப் பூக்கள் உலகமெங்கும் மலரவே)
52. குழு இசை - இருபாலார்

(50 – 52 போட்டிப் பிரிவு 300 வரையான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்)

திரையிசைப் பாடல் - (ஏழு ஸ்வரங்களுக்குள் எத்தனை பாடல்கள்)
53. குழு இசை - பெண்கள்

திரையிசைப் பாடல் - (இராகங்கள் பதினாறு உருவான வரலாறு)

54. குழு இசை - ஆண்கள்

திரையிசைப் பாடல் (வெள்ளைப் பூக்கள் உலகமெங்கும் மலரவே)
55. குழு இசை - இருபாலார்

( 53 – 55 போட்டிப் பிரிவு 301 - 1000 வரையான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்)

திரையிசைப் பாடல் - (ஏழு ஸ்வரங்களுக்குள் எத்தனை பாடல்கள்)

56. குழு இசை - பெண்கள்

திரையிசைப் பாடல் - (இராகங்கள் பதினாறு உருவான வரலாறு)

57. குழு இசை - ஆண்கள்

திரையிசைப் பாடல் (வெள்ளைப் பூக்கள் உலகமெங்கும் மலரவே)

58. குழு இசை -இருபாலார்

( 56 – 58 போட்டிப் பிரிவு 1001 இற்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்)

திரையிசைப் பாடல் (வெள்ளைப் பூக்கள் உலகமெங்கும் மலரவே)

59. குழு இசை -ஆண்கள் / பெண்கள் / இருபாலார்

( 59 – போட்டிப் பிரிவு சர்வதேச பாடசாலைகள் மற்றும் ஏனைய தனியார் பாடசாலைகள்)

- 50 – 59 வரையான போட்டிப் பிரிவுகளுக்கான அறிவுறுத்தல்கள்
  - 6 – 10 வரையான மாணவர்கள் குழுவில் பங்கு பற்றலாம்.
  - இலத்திரனியல் ஓர்கன் பயன்படுத்தலாம்.
  - மின் இணைப்பு வழங்கப்படமாட்டாது.
  - பக்கவாத்யம் இசைப்படுபவர்கள் குழுவின் அங்கத்தவர்களாகக் கருதப்படுவர்.
  - நேரம் 5 – 7 நிமிடங்கள்

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| 1 | ஸ்ருதி | 15 |
| 2 | தாளம் | 15 |
| 3 | பாடுந்திறன் | 20 |
| 4 | பாவம் | 15 |
| 5 | ஒத்திசைவு | 15 |
| 5 | உச்சரிப்புத் தெளிவு | 10 |
| 6 | நிலை-சமர்ப்பணம் | 05 |
| 7 | நேரம் | 05 |
| | மொத்தம் | 100 |

விரும்பிய இராகத்தில் அமைந்த இலகுவான கீர்த்தனை

60. தனி வாத்யம் வயலின்
61. தனி வாத்யம் வீணை
62. தனி வாத்யம் புல்லாங்குழல்
63. தனி வாத்யம் நாதஸ்வரம்

( 60 - 63 போட்டிப் பிரிவு 300 வரையான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்)

64. தனி வாத்யம் வயலின்
65. தனி வாத்யம் வீணை
66. தனி வாத்யம் புல்லாங்குழல்
67. தனி வாத்யம் நாதஸ்வரம்

( 64 – 67 போட்டிப் பிரிவு 301- 1000 இற்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்)

68. தனி வாத்யம் வயலின்
69. தனி வாத்யம் வீணை
70. தனி வாத்யம் புல்லாங்குழல்
71. தனி வாத்யம் நாதஸ்வரம்

(68 – 71 போட்டிப் பிரிவு 1001 இற்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்)

- 60 - 71 வரையான போட்டிப் பிரிவுகளுக்கான அறிவுறுத்தல்கள்
  - இருபாலாரும் ஸ்ருதியுடன் பக்க வாத்யமாக ஏதேனும் ஒரு தாள வாத்யத்தை பயன்படுத்தலாம்.
  - நேரம் 4 – 6 நிமிடங்கள்

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| 1 | ஸ்ருதி | 20 |
| 2 | தாளம் | 20 |
| 3 | வாசிக்குந் திறன் | 20 |
| 4 | உருப்படித் தெரிவு | 05 |
| 5 | சாஹித்ய பாவம் | 20 |
| 6 | நிலை-சமர்ப்பணம் | 10 |
| 7 | நேரம் | 05 |
| | மொத்தம் | 100 |

விரும்பிய இராகத்தில் அமைந்த நோட்டுஸ்வரங்கள்

72. குழு வாத்ய இசை பல்லியம்

( 72- போட்டிப் பிரிவு 300 வரையான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்)

73. குழு வாத்ய இசை பல்லியம்

( 73- போட்டிப் பிரிவு 301 -1000 வரையான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்)

74. குழு வாத்ய இசை பல்லியம்

( 74 போட்டிப் பிரிவு 1001 இற்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்)

- 72 - 74 வரையான போட்டிப் பிரிவுகளுக்கான அறிவுறுத்தல்கள்
  - சாஸ்த்திரிய இசையாக இருத்தல் வேண்டும்.
  - 8 – 12 மாணவர்கள் பங்கு பற்றலாம்
  - குறைந்தது 4 வாத்யங்கள் இடம்பெற வேண்டும்.
  - நேரம் 3 – 5 நிமிடங்கள்

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| 1 | ஸ்ருதி | 20 |
| 2 | தாளம் | 20 |
| 3 | வாசிக்குந் திறன் | 20 |
| 4 | சாஹித்ய பாவம் | 15 |
| 5 | குழு ஒத்திசைவு | 10 |
| 6 | நிலை-சமர்ப்பணம் | 10 |
| 7 | நேரம் | 05 |
| | மொத்தம் | 100 |

C. மேல் பிரிவு 02 - தரம் 12 தொடக்கம் 13 வரை

**சிரேஷ்ட போட்டிப் பிரிவு 02 இன் சகல பிரிவுகளுக்குமான தனி இசை போட்டி நிகழ்ச்சிகளும் ஆண் பெண் வேறுபாடின்றி பொது போட்டி நிகழ்ச்சியாகவே நடாத்தபடும்.**

கர்நாடக இசையில் காணப்படும் மத்திமகாலக் கீர்த்தனை ஒன்றினை ஆலாபனை செய்து உரிய இடத்தில் நிரவல் செய்து கற்பனாஸ்வரம் பாட வேண்டும்.

75. தனி இசை
( 75 -போட்டிப் பிரிவு 300 வரையான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்)

76. தனி இசை
( 76 - போட்டிப் பிரிவு 301 - 1000 இற்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்)

77. தனி இசை
( 77- போட்டிப் பிரிவு 1001 இற்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்)

- 75 – 77 வரையான போட்டிப் பிரிவுகளுக்கான அறிவுறுத்தல்கள்
  - சாஸ்த்திரிய இசையாக இருத்தல் வேண்டும்.
  - பக்க வாத்யங்களாக ஸ்ருதி வாத்யத்துடன் ஏதேனும் ஒரு தாள வாத்யம் தேவைப்படின் மட்டும் பயன்படுத்தலாம்.
  - நேரம் 6 – 8 நிமிடங்கள்

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| 1 | ஸ்ருதி | 15 |
| 2 | தாளம் | 15 |
| 3 | இராக ஆலாபனை | 15 |
| 4 | நிரவல் | 15 |
| 5 | கற்பனாஸ்வரம் | 10 |
| 6 | பாடுந்திறன் | 10 |
| 7 | பாவம் | 05 |
| 8 | உச்சரிப்புத் தெளிவு | 05 |
| 9 | நிலை | 05 |
| 10 | நேரம் | 05 |
| | மொத்தம் | 100 |

ஆபோஹி இராகத்தில் அமைந்த வர்ணம் பூர்வாங்கம் முதலாம் காலம் மாத்திரம்

78. தனி வாத்யம் வயலின்
79. தனி வாத்யம் வீணை
80. தனி வாத்யம் புல்லாங்குழல்
81. தனி வாத்யம் நாதஸ்வரம்

( 78 – 81 போட்டிப் பிரிவு 300 வரையான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்)

82. தனி வாத்யம் வயலின்
83. தனி வாத்யம் வீணை
84. தனி வாத்யம் புல்லாங்குழல்
85. தனி வாத்யம் நாதஸ்வரம்

(82 – 85 போட்டிப் பிரிவு 301 -1000 வரையான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்)

86. தனி வாத்யம் வயலின்
87. தனி வாத்யம் வீணை
88. தனி வாத்யம் புல்லாங்குழல்
89. தனி வாத்யம் நாதஸ்வரம்

( 86 – 89 போட்டிப் பிரிவு 1001 இற்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்)

- 78 - 89 வரையான போட்டிப் பிரிவுகளுக்கான அறிவுறுத்தல்கள்
  - இருபாலாரும் ஸ்ருதியுடன் பக்க வாத்யமாக ஏதேனும் ஒரு தாள வாத்யத்தை பயன்படுத்தலாம்.
  - நேரம் 3 – 5 நிமிடங்கள்

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| 1 | ஸ்ருதி | 20 |
| 2 | தாளம் | 20 |
| 3 | வாசிக்குந் திறன் | 20 |
| 4 | உருப்படித் தெரிவு | 05 |
| 5 | சாஹித்ய பாவம் | 20 |
| 6 | நிலை-சமர்ப்பணம் | 10 |
| 7 | நேரம் | 05 |
| | மொத்தம் | 100 |

D. திறந்த போட்டிப் பிரிவு தரம் 06 தொடக்கம் 13 வரை

| |
|---|
| பெண்கள் / ஆண்கள் / இருபாலார் - ஏதேனும் ஒரு குழு |
| நம்நாட்டுப் பாடல் - உச்சிமலை சாரலிலே – மலரன்பன் |

90. குழு இசை
( 90 போட்டிப் பிரிவு 300 வரையான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்)

91. குழு இசை
( 91 போட்டிப் பிரிவு 301-1000 வரையான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்)

92. குழு இசை
( 92 போட்டிப் பிரிவு 1001 இற்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்)

93. குழு இசை - பெண்கள்
( 93 போட்டிப் பிரிவு சர்வதேச பாடசாலைகள் மற்றும் ஏனைய தனியார் பாடசாலைகள்)

- 90 – 93 வரையான போட்டிப் பிரிவுகளுக்கான அறிவுறுத்தல்கள்
  - 6 – 10 வரையான மாணவர்கள் ஒரு குழுவில் பங்கு பற்றலாம் அதில் 3 பேர் பக்க வாத்யங்கள் இசைக்க பயன்படுதலாம்.
  - நேரம் 3 – 5 நிமிடங்கள்

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| 1 | இயல்பான மொழி நடை | 20 |
| 2 | இயல்பான ஓசை | 20 |
| 3 | பொருத்தமான தாள வாத்ய இசை | 20 |
| 4 | பாடலுக்கேற்ற உணர்ச்சி வெளிப்பாடு | 15 |
| 5 | ஒத்திசைவு | 10 |
| 5 | ஒப்பனை ஆடை அணிகள் | 05 |
| 6 | நிலை-சமர்ப்பணம் | 05 |
| 7 | நேரம் | 05 |
| | மொத்தம் | 100 |

**சகல பிரிவுகளுக்குமான இசை நாடகப் பாடல் நிகழ்ச்சிகளும் ஆண்கள், பெண்கள், இருபாலார் என்ற வேறுபாடின்றி பொது போட்டி நிகழ்ச்சியாகவே நடாத்தபடும்.**

இசை நாடகப் பாடல் - அரிச்சந்திர மயான காண்டத்தில் ஏதேனும் ஒரு காட்சியமைப்பின் பாடல்

94. குழு நாடகப் பாடல்

( 94 போட்டிப் பிரிவு 300 வரையான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்)

95. குழு நாடகப் பாடல்

( 95 போட்டிப் பிரிவு 301-1000 வரையான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்)

96. குழு நாடகப் பாடல்

( 96 போட்டிப் பிரிவு 1001 இற்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்)

- 94 – 96 போட்டிப் பிரிவுகளுக்கான அறிவுறுத்தல்கள்
    - 6 - 9 மாணவர்கள் பங்கு பற்றலாம்
    - 3 பக்கவாத்யங்கள் இடம்பெற வேண்டும்.
    - நேரம் 4 - 5 நிமிடங்கள்

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| 1 | ஸ்ருதி | 20 |
| 3 | நாடகபாங்கு | 20 |
| 4 | மெட்டமைப்பு | 15 |
| 5 | உணர்ச்சி வெளிப்பாடு | 20 |
| 6 | குழு ஒத்திசைவு | 10 |
| 7 | நிலை-சமர்ப்பணம் | 10 |
| 8 | நேரம் | 05 |
| | மொத்தம் | 100 |

வருண அழககோன்
கல்விப் பணிப்பாளர்
அழகியற் கல்விக்கிளை
கல்வி அமைச்சு

## இணைப்பு - 01

மாதிரி விண்ணப்பப் படிவம்

(இம் மாதிரிக்கேற்ப விண்ணப்பப்படிவத்தை தயாரித்தல் வேண்டும். விண்ணப்பப்படிவம் தயாரிக்கும்பொழுது தட்டச்சு அல்லது கணினியைப் பயன்படுத்துவது சிறப்பானது.)

**அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான கர்நாடக சங்கீதப் போட்டி – 2024**

உரிய கூட்டினுள் √ அடையாளமிடுக

| பாடசாலை வகை | | | |
|---|---|---|---|
| 300 இற்கு குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் | 301 – 1000 இற்கு இடைப்பட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் | 1001 இற்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் | சர்வதேச பாடசாலைகள் மற்றும் ஏனைய தனியார் பாடசாலைகள் |
| | | | |

1. பாடசாலையின் பெயரும் முகவரியும் : …………………………………………………………

………………………………………………………………………………………..…………………

2. தொலைபேசி இலக்கம் பாடசாலை…………………அதிபர்…………………ஆசிரியர் ……...……

3. பாடசாலை அமைந்துள்ள கல்வி வலயம் :……………………………………………………….

4. பாடசாலை அமைந்துள்ள மாகாணம் :……………………………………………………….

5. தோற்றுகின்ற போட்டி (சுற்றுநிருபத்திற்கமைவாக)

| தொ. இ | போட்டி நிகழ்ச்சி | நிகழ்ச்சி இலக்கம் | தனி / குழு |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |

6. போட்டியில் பங்குபற்றும் மாணவ மாணவியிர் பெயர் பட்டியல் ஆங்கில கெப்பிட்டல் (ENGLISH CAPITAL) எழுத்துக்களில் எழுதுக.

| தொ.இ | மாணவ மாணவியர் பெயர் | ஆண்/ பெண் | கல்வி கற்கும் தரம் | பிறந்த திகதி | கையொப்பம் |
|---|---|---|---|---|---|
| 1. | | | | | |
| 2. | | | | | |
| 3. | | | | | |
| 4. | | | | | |
| 5. | | | | | |
| 6. | | | | | |
| 7. | | | | | |
| 8. | | | | | |
| 9. | | | | | |
| 10. | | | | | |

1. போட்டிக்கான உதவிகள்

7.1. வாத்யம்

| தொ. இ | மாணவ மாணவியர் பெயர் | கல்வி கற்கும் பாடசாலை | ஆண்/ பெண் | கல்வி கற்கும் தரம் | பிறந்த திகதி | கையொப்பம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | | | | | | |
| 2. | | | | | | |
| 3. | | | | | | |
| 4. | | | | | | |
| 5. | | | | | | |

7.2. பக்கவாத்யம்

| தொ. இ | ஆசிரியர் பெயர் | பாடசாலை | பிறந்த திகதி | கையொப்பம் |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |

8. போட்டி நிகழ்ச்சியை பயிற்றுவித்த ஆசிரியர்கள்

| தொ. இ | ஆசிரியர் பெயர் | பாடசாலை | தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் | கையொப்பம் |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |

9. மாணவ மாணவியருக்கு பொறுப்பாக வருகைத்தரும் ஆசிரியர்கள்

| தொ. இ | ஆசிரியர் பெயர் | பாடசாலை | தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் | கையொப்பம் |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |

(மாணவிகளின் நிகழ்ச்சியாயின் ஆசிரியை ஒருவரும் ஆண் மாணவர்களின் நிகழ்ச்சியாயின் ஆசிரியர் ஒருவரும், இருபாலார் நிகழ்ச்சியாயின் ஆசிரிய ஆசிரியைகளும் பொறுப்பாளர்களாக பங்குபற்றுதல் கட்டாயமாகும்.)

இப்போட்டியில் பங்குபற்றுகின்ற மாணவ மாணவிகள் தாம் பங்குபற்றுகின்ற போட்டி நிகழ்ச்சிக்குரிய தரங்களில் கல்வி கற்கின்றார்கள் எனவும் சுற்றுநிரூபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சகல போட்டி நிபந்தனைகளையும் அறிந்து போட்டியிடக் கட்டுப்பட்டுள்ளார்கள் எனவும், போட்டிகளின் போது மாணவர்களுக்குரிய பொறுப்பாளராக பெற்றோர்களையோ அல்லது வேறு நபர்களையோ அனுமதிப்பதில்லை எனவும், நடுவர்களின் தீர்ப்பினை இறுதித் தீர்ப்பாகக் கொள்வதாகவும் சகல சந்தர்ப்பங்களிலும் எனது பாடசாலையின் மாணவ மாணவிகள் ஒழுக்கமாக நடந்துக்கொள்ளும் பொறுப்பினை தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்கின்றேன் எனவும் உறுதியளிக்கின்றேன்.

…………………………… ……………………………………….
ஆசிரியரின் கையொப்பம் அதிபரின் கையொப்பம்

…………………………… ………………………………………
ஆசிரியரின் பெயர் அதிபரின் பெயரும் பதவி முத்திரையும்

……………………… …………………………
திகதி திகதி

(தேசிய மட்டத்திற்கு தெரிவாகும் சகல போட்டியாளர்களும் இவ்விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து சமர்ப்பித்தல் கட்டாயமானதாகும். இவ்விண்ணப்பப் படிவம் சமர்ப்பிக்க தவறும் பட்சத்தில் போட்டியில் பங்குபற்ற வாய்ப்பளிக்கபடமாட்டாது.

இணைப்பு - 02

உறுதிப்படுத்தல் மாதிரிப் படிவம்
(அதிபரினால் பூரணப்படுத்தப்படல் வேண்டும்.)

**அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான கர்நாடக சங்கீதப் போட்டி – 2024**

1. பாடசாலையின் பெயரும் முகவரியும் : ………………………………………………

………………………………………..……………………………………………...…………………

1. மாணவ மாணவியர் பெயர் :……………………………………………

2. கல்வி கற்கும் தரம் :……………………………………………

3. பிறந்த திகதி :…………………………………………………

4. போட்டி நடைபெறும் வருடம் ஜனவரி 1 ஆம் திகதிக்கு வயது :…………

மேற்குறிப்பட்ட மாணவன் / மாணவி எனது பாடசாலையில் குறிப்பட்ட தரத்தில் கல்வி கற்கின்றார் என்றும் அவர் தொடர்பாக குறிப்பிட்டுள்ள தகவல்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன்

………………….. ……………………………….………..
திகதி அதிபர் கையொப்பம்

பதவி முத்திரை :………………………………

கல்வி வலயத்தின்/கோட்டத்தின் சங்கீதபாட பொறுப்பு பி.க.ப/உ.க.ப/ஆசிரியர் ஆலோசகரின் சிபாரிசு

அதிபரினால் சமர்ப்பிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட மாணவன் / மாணவி தொடர்பாக தகவல்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் சிபாரிசு செய்கிறேன்.

…………………….…….. ………………..…………
கையொப்பம் பதவி முத்திரை
சங்கீதபாட பொறுப்பு பி.க.ப/உ.க.ப/
ஆசிரியர் ஆலோசகர்